**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS,
# MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 596 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 6** |
| **Name** | **:** | **திரு. பச்சை** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.08.2025**

எதிரிகள் 1 முதல் 3, 5,6 ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மேலூர் தாலுகா, சருகுவளையபட்டியில் குடியிருந்து வருகிறேன். 2,3 எதிரிகளை மட்டும் தெரியும். அவர்கள் உள்ளூர்க்காரர்கள் என்பதால் தெரியும். மற்ற எதிரிகளை சரியாக மட்டுப்படவில்லை (அடையாளம் தெரியவில்லை). நான் பூ வியாபாரம் செய்து வருகிறேன். காலை 05.00 மணிக்குச் சென்றுவிட்டு, இரவு 07.00 மணிக்குத் தான் வருவேன். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் கு.வி.**

போலிசார் விசாரணையின் போது, இவ்வழக்கில் இறந்து போன தமிழ் என்ற பச்சையம்மாளை எனக்கு நன்கு தெரியும் என்றும், இவ்வழக்கிற்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் என்ற பச்சையம்மாளை உள்ளூரில் பிட்டர் கண்ணன் மகன் சாமிக்கண்ணு என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்ததாகவும், கொஞ்ச நாளில் சாமிக்கண்ணு வெளிநாடு போய்விட்டதாகவும், அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதாகவும், சாமிக்கண்ணு வெளிநாட்டில் இருக்கும் போது, தமிழின் நடவடிக்கை சரியில்லை, பலரிடம் கள்ளத் தொடர்பு வைத்திருப்பதாகவும் அடிக்கடி மேலூர் டவுனுக்கு போய்விடுகிறது என்று சாமிக்கண்ணு வீட்டார் பிரச்சனை செய்ததாகவும், ஒரு தடவை சாமிக்கண்ணு ஊருக்கு வந்த நாளில், பிரச்சனை பெரியதாகி ஊரில் பஞ்சாயத்து வைத்தாகவும், இனிமேல் ஒழுங்காக வீட்டில் இருக்கு வேண்டும், இல்லை என்றால் விவாகரத்து செய்துவிடுவோம் என்று எச்சரித்து எழுதி வாங்கியதாகவும், சாமிக்கண்ணு திரும்ப வெளிநாடு போய்விட்டததாகவும் அந்த நேரத்தில் தமிழின் நடவடிக்கை சரியில்லை. பலருடன் கள்ளத் தொடர்பு வைத்திருக்கிறார் என்று ஊரில் பஞ்சாயத்து வைத்து, தீர்த்துவிட்டதாகவும், பிள்ளைகளை பிட்டர் கண்ணன் வீட்டில் வளர்த்து வந்ததாகவும், சாமிக்கண்ணு வெளிநாட்டில் இருந்து ஊருக்கு வந்த போது, வேறு பெண்ணை பார்த்து 2 வது திருமணம் செய்து கொண்டதாகவும், அதில் பிரச்சனை ஆகி தமிழ் கீழவளவு போலிஸ் ஸ்டேசன், மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மதுரை கோர்ட்டில் சாமிக்கண்ணு மீது தமிழ் கேஸ் போட்டதாகவும், இதனால் சாமிக்கண்ணு, தமிழ் மீது கோவமாக இருந்ததாகவும், தமிழ் கடந்த 01.10.2006 ல் இருந்து, காணவில்லை என்றும், அதற்கு கொஞ்ச நாட்கள் முன்பு, சாமிக்கண்ணு தமிழ் வீட்டிற்கு வந்ததாகவும், அப்போது தமிழ் வீட்டில் இல்லை என்றும், தமிழ் குடியிருந்த வீட்டின் கதவை கல்லை விட்டு எறிந்து உடைத்து தமிழைக் கண்டபடி பேசியதாகவும், என் மீது போலிசிஸ் மற்றும்

கோர்ட்டில் கேஸ் கொடுத்திருக்கியா? உன்னை வெட்டு புதைத்துவிடுவேன்டீ என்று கத்திவிட்டு போனதாகவும், 01.10.2006ம் தேதி தமிழைக் காணவில்லை என்றும் அன்று சாயங்காலம் ஒரு பையன் வந்து, TVS 50ல் கூட்டிப் போனதை நான் பார்த்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் உள்ளூர்காரர்கள் என்றும் அதனால் எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

01.10.2006ம் தேதி சாயங்காலம் தமிழை ஒரு நபர் கூட்டிச் சென்றார் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த நபர் தான் தமிழின் மரணத்திற்குக் காரணம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS,
# MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 596 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 7** |
| **Name** | : | **திருமதி.பூமாலை** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.08.2025**

எதிரிகள் 1 முதல் 3, 5,6 ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மேலூர் தாலுகா, சருகுவளையபட்டியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அதில் 1,2 எதிரிகள் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள், மற்றவர்கள் பக்கத்து ஊரைச் சார்ந்தவர்கள். இவ்வழக்கில் இறந்து போன தமிழ் என்ற பச்சையம்மாள் எனது பங்காளி வீட்டுப் பிள்ளை ஆவார். வழக்கிற்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு 1 வது எதிரிக்கு தமிழ் என்ற பச்சையம்மாளைத் திருமணம் செய்து கொடுத்தார்கள். அவர்களுக்கு 2 பிள்ளைகள். சாமிக்காண்ணு வெளிநாட்டில் வேலை செய்து வந்தார். தமிழ் என்ற பச்சையம்மாள் தற்போது உயிருடன் இல்லை. இறந்துவிட்டார். எப்படி இறந்தார் என்று எனக்குத் தெரியாது. வழக்கு சம்பவம் பற்றித் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, இவ்வழக்கில் இறந்து போன தமிழ் என்ற பச்சையம்மாளை எனக்கு நன்கு தெரியும் என்றும், இவ்வழக்கிற்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் என்ற பச்சையம்மாளை உள்ளூரில் பிட்டர் கண்ணன் மகன் சாமிக்கண்ணு என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்ததாகவும், கொஞ்ச நாளில் சாமிக்கண்ணு வெளிநாடு போய்விட்டதாகவும், அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதாகவும், சாமிக்கண்ணு வெளிநாட்டில் இருக்கும் போது,பச்சையம்மாள் மேலூர் டவுன் பக்கம் போய்விடுகிறார், கண்ட ஆட்களிடம் கள்ளத்தொடர்வு வைத்திருக்கிறார் என்று என்று சாமிக்கண்ணு வீட்டார் பிரச்சனை செய்து, பஞ்சாயத்து வைத்து, ஜாதி வழக்கப்படி விவாகத்து செய்துவிட்டார்கள், பிள்ளைகளை சாமிக்கண்ணு வீட்டில் வைத்து வளர்த்து வருகிறார்கள் என்றும் தமிழ் தனியாகத்தான் வாழ்ந்து வந்தார் என்றும் சாமிக்கண்ணு ஒரு வருடத்திற்கு முன்பு, வெளிநாட்டில் இருந்து வந்து, குன்றாம்பட்டியைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதாகவும், அதனால் தமிழ் போலிசில் புகார் கொடுத்ததாகவும், சாமிக்கண்ணு மீது மதுரை கோர்ட்டில் கேஸ் போட்டதாகவும், சாமிக்கண்ணு ஒரு தடவை தமிழ்வீட்டிற்கு வந்து தகராறு செய்துவிட்டு போனதாகவும், இப்படி இருக்க, ஒரு மாத காலமாக தமிழைக் காணவில்லை என்றும் கடந்த 01.10.2006ம் தேதி சாயங்காலம் 06.15 மணியைப் போல நான் வேலைக்குப் போய்விட்டு, தனியாமங்கலம் ஊர்வழியாக சிட்டி பஸ்சில் ஊருக்கு வந்த போது, வரும் வழியில் மட்டைங்கிபட்டி ஆத்துக்கால் பாலம் அருகில் உள்ள பஸ் ஸ்டாப் பக்கம், சாமிக்கண்ணு, துரை, மணிவண்ணன், ஜப்பான் என்ற அழகர்,

முருகேசன் ஆகியோர் கூட்டமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததாகவும், ஊருக்குள் தமிழைக் காணவில்லை என்றும் சாமிக்கண்ணும், துரையும், அவர்களது ஆட்களுடன் சேர்ந்து தமிழைக் கொன்றுவிட்டதாக ஊரில் பேசிக் கொண்டதாகவும், 26.10.2006ம் தேதி தமிழின் சித்தப்பா வைரவன், போலிசில் புகார் கொடுத்து கேஸ் போட்டிருப்பதாக கேள்விப்பட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் எனக்குத் தெரிந்த நபர்கள் என்றும் அதனால் எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS,
# MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC No. 596 / 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW : 8** |
| **Name** | **:** | **திருமதி.சந்திரா** |
| **Father's Husband's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.08.2025**

எதிரிகள் 1 முதல் 3, 5,6 ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மேலூர் தாலுகா, சருகுவளையபட்டியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அதில் 1,2 எதிரிகள் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள், மற்றவர்கள் பக்கத்து ஊரைச் சார்ந்தவர்கள். இவ்வழக்கில் இறந்து போன தமிழ் என்ற பச்சையம்மாளைத் தெரியும். வழக்கிற்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு 1 வது எதிரிக்கு தமிழ் என்ற பச்சையம்மாளைத் திருமணம் செய்து கொடுத்தார்கள். அவர்களுக்கு 2 பிள்ளைகள். சாமிக்காண்ணு வெளிநாட்டில் வேலை செய்து வந்தார். தமிழ் என்ற பச்சையம்மாள் தற்போது உயிருடன் இல்லை. இறந்துவிட்டார். எப்படி இறந்தார் என்று எனக்குத் தெரியாது. வழக்கு சம்பவம் பற்றித் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையின் போது, இவ்வழக்கில் இறந்து போன தமிழ் என்ற பச்சையம்மாளை எனக்கு நன்கு தெரியும் என்றும், இவ்வழக்கிற்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ் என்ற பச்சையம்மாளை உள்ளூரில் பிட்டர் கண்ணன் மகன் சாமிக்கண்ணு என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்ததாகவும், கொஞ்ச நாளில் சாமிக்கண்ணு வெளிநாடு போய்விட்டதாகவும், அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருப்பதாகவும், சாமிக்கண்ணு வெளிநாட்டில் இருக்கும் போது,பச்சையம்மாள் மேலூர் டவுன் பக்கம் போய்விடுகிறார், கண்ட ஆட்களிடம் கள்ளத்தொடர்வு வைத்திருக்கிறார் என்று என்று சாமிக்கண்ணு வீட்டார் பிரச்சனை செய்து, பஞ்சாயத்து வைத்து, ஜாதி வழக்கப்படி விவாகத்து செய்துவிட்டார்கள், பிள்ளைகளை சாமிக்கண்ணு வீட்டில் வைத்து வளர்த்து வருகிறார்கள் என்றும் தமிழ் தனியாகத்தான் வாழ்ந்து வந்தார் என்றும் சாமிக்கண்ணு ஒரு வருடத்திற்கு முன்பு, வெளிநாட்டில் இருந்து வந்து, குன்றாம்பட்டியைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதாகவும், அதனால் தமிழ் போலிசில் புகார் கொடுத்ததாகவும், சாமிக்கண்ணு மீது மதுரை கோர்ட்டில் கேஸ் போட்டதாகவும், சாமிக்கண்ணு ஒரு தடவை தமிழ்வீட்டிற்கு வந்து தகராறு செய்துவிட்டு போனதாகவும், இப்படி இருக்க, ஒரு மாத காலமாக தமிழைக் காணவில்லை என்றும் கடந்த 01.10.2006ம் தேதி சாயங்காலம் 06.15 மணியைப் போல நான் வேலைக்குப் போய்விட்டு, தனியாமங்கலம் ஊர்வழியாக சிட்டி பஸ்சில் ஊருக்கு வந்த போது, வரும் வழியில் மட்டைங்கிபட்டி ஆத்துக்கால் பாலம் அருகில் உள்ள பஸ் ஸ்டாப் பக்கம், சாமிக்கண்ணு, துரை, மணிவண்ணன், ஜப்பான் என்ற அழகர்,

முருகேசன் ஆகியோர் கூட்டமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததாகவும், ஊருக்குள் தமிழைக் காணவில்லை என்றும் சாமிக்கண்ணும், துரையும், அவர்களது ஆட்களுடன் சேர்ந்து தமிழைக் கொன்றுவிட்டதாக ஊரில் பேசிக் கொண்டதாகவும், 26.10.2006ம் தேதி தமிழின் சித்தப்பா வைரவன், போலிசில் புகார் கொடுத்து கேஸ் போட்டிருப்பதாக கேள்விப்பட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் எனக்குத் தெரிந்த நபர்கள் என்றும் அதனால் எதிரிகளைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை